# தேசிய பால்வள மேம்பாட்டு வாரியம் சார்பில் நடைபெறும் கூட்டுறவின் வளர்ச்சி கருத்தரங்கில் மாண்புமிகு துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன் அவர்களின் உரை

இடம் – ஓட்டல் சன்வே மேனர், புதுச்சேரி தேதி – 11.09.2025

Respected Chief Minister Thiru Rangasamy, Chairman of NDDB Dr. Meenesh Shah, Minister for Animal Husbandry Shri Jayakumar, MLA, Chief Secretary, Sr. Officials of NDDB, NABARD & NCDC, Secretary(Co-operation) Dairy Cooperative Leaders from Southern States, Chairman & Managing Directors of all Southern Milk Unions, Officials, esteemed dignitaries, farmers, brothers & Sisters, அனைவருக்கும் வணக்கம்.

Today - the national poet Subramaniya Bharathy's Memorial Day. So, it will be appropriate to start with his words "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" **i.e., Cooperative Prosperity**

While we are celebrating the International Year of Cooperatives (IYC-2025) as declared by the United Nations, coinciding with the a remarkable milestone – the Diamond Jubilee of NDDB – The National Dairy Development Board it becomes more significant in organsing a Seminar on 'Cooprative Prosperity'. It is not just a theme. It is our reality with the timeless principle **"By the People, For the People".** So, on the outset I appreciate the Officials of NDDB and Co-operative Dept. for organising this State-level Seminar.

எந்த ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் கூட்டுறவு இயக்கம் அல்லது செயல்பாடு என்பது ஒரு ஆற்றல் மிக்க பொருளாதார சக்தியாக மாறி இருப்பதை நாம் வரலாற்றில் பார்க்கிறோம். இது இந்தியாவில் மட்டும் அல்ல. உலகம்

முழுவதும் உள்ள மனித குலம் கண்ட உண்மை. இந்தியாவில் கூட்டுறவின் பாரம்பரியம் மிகவும் பழமையானது. நம்முடைய கிராமங்களில் மக்கள் ஒன்று சேர்ந்து வயல்களில் பயிர் செய்யதும், குளம், கண்மாய், ஏரி போன்ற நீர் நிலைகளை செம்மை படுத்தியதும், கோயில்கள் கட்டி எழுப்பியதும், ஒன்று கூடி விழாக்கள் எடுத்ததும் எல்லாம் மக்களின் ஒன்றிணைந்த செயல்பாடுகள். நாடு சுதந்திரம் அடைந்த பிறகு கூட்டுறவு இயக்கம் சீர்படுத்தப்பட்டு சட்ட அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் கதையை - அதன் வெற்றியை நாம் பேச வேண்டும் என்றால் குஜராத் பால் வள கூட்டுறவு இயக்கம் பற்றி பேசாமல் இருக்க முடியாது. அதுதான் NDDB யின் கதை. குஜராத்தில் அரசு அதிகாரியாக 45 ஆண்டுகள் பணியாற்றி இருக்கிறேன். அங்கே ஏற்பட்ட சமுதாய - பொருளாதார வளர்ச்சி - மாற்றத்தின் சாட்சியாக நான் உங்கள் முன் நிற்கிறேன்.

1965 இல் தொடங்கிய ஒரு சிறிய யோசனை (A SIMPLE IDEA) “AMUL” கூட்டுறவாக இன்று நாடு முழுவதும் பரவி இருக்கிறது. Dr. VARGHESE KURIEN “இந்தியாவின் பால்காரர்” **MILK MAN OF INDIA** என்ற சொல்லுவார்கள். அவர் NDDB மூலமாக பால் உற்பத்திக்கான ஒரு மிகப் பெரிய மக்கள் இயக்கத்தை தொடங்கி வைத்தார். **வெள்ளைப் புரட்சி - “THE OPERATION FLOOD”**. அது நாட்டின் தலை எழுத்தையே மாற்றி அமைத்தது. கோடிக் கணக்கான மக்களின், குறிப்பாக கிராமப்புற ஏழை-எளிய விவசாய மக்களின் வாழ்க்கையில் ஒரு மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இதுவரை உலகம் பார்த்து இருக்காத மிகப்

பெரிய பால் வள மேம்பாட்டு திட்டமாக அது வளர்ந்து இருக்கிறது. அதன் முதல் நோக்கம் – பால் பற்றாக்குறை உள்ள இந்தியாவை உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தி நாடாக மாற்றுவதுதான்.

NDDB நாடு முழுவதும் பால் பண்ணைகளை அமைத்தது. அதன் மூலமாக தேசிய அளவிலான ஒரு NETWORK ஏற்படுத்தியது. இன்று நாடு முழுவதும் 1.72 கோடி விவசாயிகள் இந்த பால் உற்பத்தி இயக்கத்தில் பங்கெடுத்து வருகிறார்கள். இந்த 60 ஆண்டுகளில், புதிய தொழில்நுட்ப வளர்ச்சியோடு நாடு முழுவதும் 2.36 லட்சம் கிராமங்களில் பரவி ஒரு வலுவான கூட்டுறவு இயக்கமாக இது வளர்ந்து இருக்கிறது. உலகின் மிகப்பெரிய பால் உற்பத்தி செய்யும் நாடாக இந்தியாவை மாற்றி இருக்கிறது. இது வெறும் புரட்சி அல்ல. **வெள்ளை புரட்சி**. மக்கள் ஒன்று சேர்ந்தால் எதையும் சாதிக்க முடியும் என்பதற்கு இதுதான் ஆதாரம். கூட்டுறவின் உண்மையான பலம் அதுதான்.

புதுச்சேரியிலும் அப்படி ஒரு சாதனையை நாம் செய்து கொண்டு இருக்கிறோம். 1955 ஆண்டு ஒரு சிறிய பால் கூட்டுறவு சங்கமாக தொடங்கப்பட்டது இன்று 104 முதன்மை பால் கூட்டுறவு சங்கங்களோடு PONLAIT என்ற கூட்டுறவு ஒன்றியமாக வளர்ச்சி அடைந்திருக்கிறது. லட்சக் கணக்கான விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள், குறிப்பாக பெண்களுக்கு ஒரு நிலையான வருவாயை ஏற்படுத்தி தந்து அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு மாற்றத்ததை கொண்டு வந்து இருக்கிறது. இன்று 19 அனைத்து பெண்கள் பால் உற்பத்தியாளர் சங்கங்கள் (ALL WOMEN MILK PRODUCERS SOCIETIES) செயல்பட்டுக் கொண்டு

இருக்கின்றன என்பது பெருமைக்கு உரிய ஒன்று. கூட்டுறவு செயல்பாட்டில் தனிமனித லாபம் அதிகம் இருக்காது. ஆனால், நிலையான பொருளாதார வளர்ச்சி, பகிர்வு இருக்கும் என்பதை நாம் கவனத்தல் கொள்ள வேண்டும். ஏனென்றால் கூட்டுறவு என்பது பொருளாதார வளர்ச்சியை மட்டும் சார்ந்தது அல்ல. அது சமத்துவம், சமூக நீதி, பொருளாதார சமநிலை என்பதை அடிப்படையாக கொண்டு உருவானது.

PONLAIT வின் வளர்ச்சியும் NDDB யோடு சேர்ந்ததுதான். NDDB யின் நேரடி உதவியோடு நவீன தொழில்நுட்பத்தை ஏற்று PONLAIT விரிவுபடுத்தப்பட்டு இருக்கிறது. இன்னும் விரிவுபடுத்தப்பட இருக்கிறது. அதற்கான திட்டங்களையும் அவர்கள் வைத்திருக்கிறார்கள். அதற்கான இந்த நேரத்தில் அவர்களுக்கு புதுச்சேரி அரசு சார்பில் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நம்முடைய அரசு அதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

இப்படிப்பட்ட கூட்டுறவு செயல்பாடு பால் உற்பத்தி என்று மட்டும் இல்லாமல் நெசவாளர்கள், மீனவர்கள், கைவினை கலைஞர்கள் என்று பல நிலைகளிலும் வளர்ச்சி பெற வேண்டும். அதுவே **அனைவரின் வளர்ச்சி அனைவருக்குமான வளர்ச்சி** 'SABKA SAATH SABKA VIKAS' என்ற அடிப்படையில் வளர்ச்சி அடைந்த பாரதம் உருவாக வழி வகுக்கும் என்று கூறி என்னுடைய உரையை முடிக்கிறேன்.

**நன்றி வணக்கம். ஜெய் ஹிந்த்.**